17 & 18 ஜூன் 2023

# Newbec

NEW WAY OF BEING CHURCH

பொதுக்காலம் ஆண்டின் 11 ஆம் ஞாயிறு

## மண்ணுலகிற்கு உப்பும் உலகிற்கு ஒளியும்:

ஒன்றிப்பு (உள்ளடக்கியது) பங்கெடுப்பு, (படைப்பாற்றல்) மறைத்தூது (உறவுகளை இணைத்தல்)

மாதாந்திர கருப்பொருள்:
தன்னை அன்பு செய்தல் மற்றும் அடுத்திருப்பவரை அன்பு செய்தல்




மாதாந்திர நிகழ்வு:
இயேசுவின் திரு இருதயம் & அன்னை மரியாவின் மாசற்ற இருதயம்

# மக்களாட்சி — முதலாளித்துவம் பற்றி திருஅவை கூறுவதென்ன?

**நீதியின் அடித்தளத்தில் அமைதி கட்டப்படுகிறது.**

திருத்தந்தை 13ம் லியோ



மனித உரிமையைப் பாதுகாப்பதிலும் சட்டத்தை நிலைநாட்டுவதிலும் சிறந்த தீர்வை வழங்கும் அரசியல் முறையைக் கொண்டிருக்கும் மக்களாட்சியை திருஅவை ஆதரித்தது. ஆயினும் இதனை மேற்கொள்வதற்கு, மக்களாட்சி முறை, பெரும்பான்மை ஆட்சியை விட மேலானதாக இருக்க வேண்டும். பெரும்பான்மை மக்களின் விருப்பத்திற்கு எதிராக, அனைவருக்கும் கடவுள் அளித்த அடிப்படை உரிமைகளை மதிக்கும் சட்டத்தால், அரசாங்கம் ஆட்சி செய்தால் மட்டும் உண்மையான மக்களாட்சி மலரும்

மனித உரிமையையும் சுயமரியாதையையும் தற்காப்பதில், மக்களாட்சியும் முழுமையான பாதுகாப்பு வழங்குவதில்லை என்பதை வரலாறு காட்டியுள்ளது. சிறுபான்மையினரை ஆட்கொள்ளும் பெரும்பான்மை ஆட்சியாக மாறும் அபாயம் உள்ளது. அதனால், மக்களாட்சிக்கு வலுசேர்க்கும் பண்புகளுக்கு எப்போது குந்தகம் ஏற்படாமல் இருப்பதை கிறிஸ்துவர்கள் எப்போது உறுதி செய்ய வேண்டும்.

பொருளாதார முயற்சிகளில் ஒவ்வொரும் பங்கு கொள்ளும் வாய்ப்பும், அவரவர் திறமைக்கேற்ப பங்காற்றும் உரிமையும் வழங்கப்பட்டு, உழைப்பின் பலனை அனுபவிக்கும் உரிமையை வழங்க வேண்டும். பொது நலத்திற்காக அதிகாரத்துவ விதிமுறைகளை அனைவரும் மதிக்க வேண்டும். சட்ட விதிமுறையின் அடிப்படையில் அமையாத எந்தவொரு முதலாளித்துவமும், பொது நலத்தை மறக்கும் நிலைமை ஏற்படலாம். மேலும் தனிநபர் லாபம் தேடும் படலம் ஆரம்பிக்கும். இதனை வன்மையாக திருஅவை எதிர்க்கிறது.

தவிர, ஏகாதிபத்தியத்தைத் தடுக்கும் சுயேச்சை சந்தை முறையை திருஅவை ஆதரிக்கிறது. அனைவருக்கும் வேலையும் அத்தியாவசியப் பொருளும் கிடைப்பது உறுதி செய்யப்படும். தனிமனிதன், குடும்பங்கள், அமைப்புகள் ஆகியவை தத்தம் சுய தேவையைப் பூர்த்தி செய்ய உதவும் பொது நலன் கருதி, எல்லா சமூக ஏற்பாடுகளையும் கத்தோலிக்கச் சமூகப் போதனை ஏற்றுக்கொள்கிறது. மனிதனுக்காக ஏற்படுத்தப்பட்ட வியாபாரத்தின் (வணிகம்) தத்துவமும் இதுவே.

*Published by:*
**Peninsular Malaysia Pastoral Team**

*Edited by:*
**Fr. Eugene**
*Director of API*

*email:*
**apidirectorkl@gmail.com**

INTERNAL CIRCULATION ONLY

BUL 25/2023